உ

சிவமயம்

அக்கினி நாச்சியார் பாமாலை

இயற்றியவர்

C. N. நாச்சியப்பன்

காரைக்குடி-1

வெளியீடு

அபிசீனியா. பழ. நாச்சியப்பன்

காரைக்குடி-1

சாதாரண ★ 1971

உ

சிவமயம்

விநாயகர் வணக்கம்

ஓத வினைஅகலும் ஓங்கு புகழ்பெருகும்
காதல் பொருளனைத்தும் கைகூடும்-சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப்போர் தீட்டும்
தனிக் கோட்டு வாரணத்தின் தாள்.

- பெருந்தேவனார்.

இலக்குமி வணக்கம்

"காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேல்வணிகர் - வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா! இலக்குமியே!
என்றைக்கும் நீங்கா திரு!"

- பாடுவார். முத்தப்ப செட்டியார்.

உ

சிவமயம்

அக்கினி நாச்சியார் பாமாலை

சீர்பெருகும் தென்பாண்டி மண்டலத்தில்
சிறப்பான திருநாடாம் செட்டி நாட்டில்
பார்புகழும் நகரத்தார் பலரும் போற்றும்
பத்தினிநல் உருவினிலே தெய்வ மாகிக்
கார்மேகம் பொழிவதுபோல் கருணை காட்டும்
கமலமலர்த் திருவனையாய்! எங்கள் தாயே!
பேர்பெற்ற அக்கினிப்பேர் ஆத்தாள் என்ற
பெரும்புகழுக் குரியவளே! வணக்கம். வாழ்க!

2

கண்டபெரும் வாழ்க்கையிலே நடந்த தென்ன?
கைக்குழந்தை யுடன்வெளியில் போந்த தென்ன?
கொண்டலெனக் கண்மாரி பொழிந்த தென்ன?
கொடுந்தீயில் வீழ்ந்திறந்த கொடுமை என்ன?
மண்டலமே தொழுதேத்தி வணங்கும் தேவி,
மலர்ப்பாக னேரியிலே பீடம் ஆகிக்
கண்கண்ட தெய்வமெனக் காட்சி தந்தாய்;
கைகூப்பித் தொழுகின்றோம் கடைக்கண் பாராய்!

3

தீப்பாய்ந்தான் காட்டினுள்ளே தேம்பித் தேம்பித்
தேவீநீ ஓடிவந்தே இடைச்சி ருரைக்
கூப்பிட்டு நெருப்பதனை மூட்டச் செய்தே
குதித்தோடிப் பாய்ந்துஅதிலே வீழ்ந்த போதில்
பூப்போன்ற பொன்மேனி கருகிப் போச்சோ?
புறத்தீயை அகத்தீதான் பொசுக்க லாச்சோ?
காப்புடைய கற்பனலுக்கு அஞ்சி, அந்தக்
கடுநெருப்பும் அணைந்ததுவோ? கண்டார் யாரே?

4

கண்ணகியின் வரலாற்றைச் சிலம்பில் கண்டு
கற்பனங்கின் ஆற்றலினை உணர்ந்தோம்; இங்கே
பெண்ணமுதே! பெருங்கதையின் தொடர்ச்சி போலே
பெருங்கற்பின் திண்மையினைக் காட்டி, நீயும்
வண்ணமுறும் கைக்குழந்தை இடையி ருக்க
வரமளிக்கும் தெய்வமெனக் காட்சி தந்தாய்
நண்ணரிய அக்கினிப்பேர் நாச்சி யாரே!
நங்கள்குலம் தழைத்தோங்கக் கடைக்கண்
பாராய்!

5

மென்கூந்தல் செருகிநிற்கும் கொண்டை காட்ட,
மேல்விளங்கும் திருமுகமோ மதியை வெல்ல,
அன்பூறும் கண்மலர்கள் அருளைப் பாய்ச்ச
அணிந்திருக்கும் மாங்கல்யம் கற்பைப் பேசச்
சின்னஇடை வருந்திடவே எடுக்கிக் கொண்ட
சிலையழகுச் சிங்காரக் குழந்தை, உன்றன்
பொன்மார்பைத் தொட்டிருக்கும் புதுமைக் காட்சி
புண்ணியம்சேர் தெய்வநிலைக் காட்சி யன்றோ?

6

சித்திரத்தில் எழுதவொண்ணு அழகாய் நின்றாய்!
சிற்பத்தில் வடிக்கவொண்ணுக் கலையும் ஆனாய்!
முத்திநிலை காணவரும் முனிவர் தாமும்
முழுநிலைசேர் பீடமதை வணங்கு கின்றார்,
எத்திசையும் புகழ்மணக்கும் எங்கள் தேவீ!
எங்கள்குலம் தழைத்தோங்கக் கருணை செய்வாய்.
பத்தினியே! அக்கினிப்பேர் நாச்சி யாரே!
பக்தர்களைக் காத்திடவே கடைக்கண் பாராய்!

7

வடக்குமுக வாசலிலே வாழ்ந்தி ருந்தாய்,
வளர்ந்தோங்கும் நகரத்தார் வாசல் வாராய்!
நடக்கும்திருப் படைப்பினிலே காட்சி தந்தாய்
நம்மனையில் வந்திருந்தே நன்மை செய்வாய்!
மடக்கொடியே! மலரடிக்குத் தெண்ட னிட்டோம்,
மனமிரங்கிப் பெருவரங்கள் தந்து காப்பாய்!
கடக்கரிய துன்பமெலாம் கரைந்து நீங்கக்
கற்புடைய பெண்ணணங்கே கடைக்கண் பாராய்!

8

பூவெடுத்து நான்போடும் பொழுதில் எல்லாம்
பொன்னாக எம்வாழ்வு பூக்கச் செய்வாய்;
பாவெடுத்து நான்பாடும் பொழுதில் எல்லாம்
பண்பட்ட அருட்கவிதை தோன்றச் செய்வாய்,
நாவெடுத்து நான்பேசும் பொழுதில் எல்லாம்
நானிலத்தார் பாராட்டும் வகைகள் செய்வாய்,
நோவெடுத்து நான்பாயில் படுக்கா வண்ணம்
நோன்புடைய நல்லுடலைத் தருவாய் அம்மா!

9

மனைமக்கள் சுற்றமெலாம் மகிழ்ந்து கூடி
மாநிலத்தில் நல்லவண்ணம் செயல்கள் ஆற்றித்

தினைப்போதும் உனைமறவா எங்கள் வாழ்வில்,
திருமகளும் கலைமகளும் சேர்ந்து வாழ

உனைத்தொழுதோம் ஆத்தாளே! ஓடி வாராய்,
உயிரமுதே! உன்மகிமை புரிந்து கொண்டோம்.

மனைவிளங்க வரம்பலவும் தருவாய் அம்மா!
மாதரசே! வாழவைக்க மலர்க்கண் பாராய்!

10

குலவிளக்கே! குளிர்நிலவே! அக்கினித் தாயே!
கோலமுகம் காட்டுகின்ற ஞானச் செல்வீ!

நலமெல்லாம் விளைவிக்கும் நாச்சி யாரே!
நற்பாக னேரிவளர் எங்கள் அம்மா!

பலகாலும் உனைநினைந்தே படைப்புச் செய்தோம்
பத்தினியே! எம்குறைகள் தவிர்ப்பாய் தாயே!

மலர்மாலை சூட்டியுன்னை வணங்கு கின்றோம்,
மங்களமாய் வாழ்ந்திடவே கடைக்கண் பாராய்!

அக்கினி நாச்சியார் அருச்சனை

அன்பின் உருவே போற்றி
அருளின் வடிவே போற்றி
அருந்தவப் பெண்ணே போற்றி
அம்பிகைத் தாயே போற்றி
அறம்வளர் தேவீ போற்றி
அடியார் நல் அணங்கே போற்றி
அக்கினி ஆத்தாள் போற்றி
அடைக்கலம் அருள்வாய் போற்றி
ஆரழல் புகுந்தாய் போற்றி
ஆதார நிலையே போற்றி
ஆனந்த வெள்ளம் போற்றி
ஆண்டருள் அன்னை போற்றி
இன்பநல் விளக்கே போற்றி
இன்னுயிர் ஈவாய் போற்றி
இனிமையின் வடிவே போற்றி
இன்பங்கள் தருவாய் போற்றி
இளநகைத் திருவே போற்றி

இலட்சிய உருவே போற்றி
ஈன்றருள் தாயே போற்றி
ஈரெட்டும் தருவாய் போற்றி
உண்மையின் உருவே போற்றி
உயிரினுக் குயிரே போற்றி
உத்தமிப் பாவாய் போற்றி
உளங் குடி கொண்டாய் போற்றி
எம்குல தெய்வம் போற்றி
ஏற்றங்கள் தருவாய் போற்றி
ஐஸ்வரியம் அளிப்பாய் போற்றி
ஒளிதரும் மணியே போற்றி
ஒப்பில்லாத் தெய்வம் போற்றி
ஒலியெலாம் ஆனாய் போற்றி
ஓங்காரத் தேவே போற்றி
கற்பகத் தருவே போற்றி
கற்பினுக் கரசே போற்றி
கண்கண்ட உருவே போற்றி
கண்டனூர்த் தெய்வம் போற்றி
கார்மழைக் கருணை போற்றி
காரைநகர்த் தேவீ போற்றி

கோமளக் கொழுந்தே போற்றி
கோடிகள் கொடுப்பாய் போற்றி
சகாய மாதா போற்றி
சஞ்சீவி ஆனாய் போற்றி
சக்திகள் தருவாய் போற்றி
சவுந்தர்ய வடிவே போற்றி
சகலமும் அருள்வாய் போற்றி
சுந்தரப் பதுமை போற்றி
சுகமெலாம் தருவாய் போற்றி
செண்பக மலரே போற்றி
செம்பனூர்ச் செல்வீ போற்றி
செந்தழல் நாச்சி போற்றி
செல்வங்கள் தருவாய் போற்றி
சொல்லுநற் றமிழே போற்றி
சொல்லினுள் அடங்காய் போற்றி
ஞாயிறு நிறத்தோய் போற்றி
ஞானப்பெண் அரசே போற்றி
தர்மத்தின் உருவே போற்றி
தத்துவம் கடந்தோய் போற்றி
தவநெறித் தாயே போற்றி

தன்னேரில் தலைவீ போற்றி
திக்கெலாம் ஒளிர்வாய் போற்றி
திருவெலாம் தருவாய் போற்றி
தீயினிற் குதித்தாய் போற்றி
தீபமாய் நின்ருய் போற்றி
துணை எனக்கு ஆனுய் போற்றி
தூயநற் சுடரே போற்றி
தூண்டாத ஜோதீ போற்றி
தென்னகச் செல்வீ போற்றி
தெய்வ நாயகியே போற்றி
நகரத்தார் வாழ்வே போற்றி
நல்வரம் தருவாய் போற்றி
நவசக்தி ஆனுய் போற்றி
நமக்கருள் மாதா போற்றி
நாச்சியார் ஆத்தாள் போற்றி
நாயகப் பெண்ணே போற்றி
நித்தியப் பொருளே போற்றி
நீதியின் வடிவே போற்றி
நுண்ணிய கருத்தே போற்றி
நூதனப் பாவாய் போற்றி

பத்தினித் தாயே போற்றி
பவளநற் கொடியே போற்றி
பராசக்தி வடிவே போற்றி
பாரெலாம் காப்பாய் போற்றி
பாகனி மேடை போற்றி
பாவங்கள் தீர்ப்பாய் போற்றி
பாவையர் திலகம் போற்றி
பிணியெலாம் தீர்ப்பாய் போற்றி
பிறவியை அறுப்பாய் போற்றி
புண்ணியப் பொருளே போற்றி
புல்வாத்தாள் மகளே போற்றி
பெண்மையின் உருவே போற்றி
பேச அரும் சக்தி போற்றி
பொற்கொடிப் பாவாய் போற்றி
பொன்ஞெளிர் மணியே போற்றி
பொற்பதம் தருவாய் போற்றி
மங்கையர்க்கு அரசி போற்றி
மங்களப் பொருளே போற்றி
மங்கிடா ஒளியே போற்றி
மங்கலம் தருவாய் போற்றி

மஞ்சள் நிறத்தோய் போற்றி
மனோன்மணி மாதா போற்றி
மலர்மகள் வடிவே போற்றி
மாமலர்த் திருவே போற்றி
மெய்ப்பொருள் உணர்ந்தாய் போற்றி
மேன்மைகள் அளிப்பாய் போற்றி
வற்றாத அருளே போற்றி
வழித்துணை வருவாய் போற்றி
வாழ்வகத்து ஒளியே போற்றி
வான்புகழ் தருவாய் போற்றி
வாழ்கநின் திருவடி போற்றி.

அக்கினி ஆத்தாள் அடிக்கமலம் தன்னில்
தக்கபல மலரிட்டுத் தாள்பணிந்தோம் தாயே!
மிக்குயர்ந்த பீடத்தின் மேலிருக்கும் அம்மா!
எக்காலும் துணையிருந்து எமைக்காக்க வேண்டும்.

வாழ்த்து

சீதமழை முகில்பொழிக! தேசமெலாம்
பயிர்விளைக! செல்வம் ஓங்க!
மாதர்குழாம் மக்கள்குழாம் மனைஅறங்கள்
உடன்பொலிந்து மலிந்து வாழ்க!
மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி
தழைத்துஓங்க! மேலும் மேலும்
பூதலமேல் சிவபெருமான் ஆலயங்கள்
பூசனைகள் பொலிக மாதோ!

— திரிகூடராசப்பகவி.

ஸ்ரீராமஜெயம்

மாதவன் மகிமை

கூன்கொண்டு சென்றவன் கூன்நிமிர்ந்து
ஓட, குருடன்கொம்பில்

தேன்என்று காட்ட, முடவன் அத்
தேனை எடுக்க, அயல்

தான்நின்ற ஊமை எனக்குஎன்று
கேட்க, தருவன் வரம்!

வான்நின்ற சோலை வடவேங்
கடமேய மாதவனே.

— ஒரு கவிஞர்.

திருமகள் அச்சகம்
காரைக்குடி. போன் : 313.